P.L.RAJ IAS & IPS ACADEMY
Building Bureaucrats Since 2006

## August 3, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. கபினி அணையில் இருந்து தமிழகத்துக்கு விநாடிக்கு 25,000 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.
   i. காவிரியில் தமிழகத்துக்கு அடுத்த 15 நாள்களுக்கு தினமும் விநாடிக்கு 3,500 கனஅடி தண்ணீர் திறந்துவிடும்படி காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு மற்றும் காவிரி நீர் மேலாண்மை ஆணையம் கர்நாடக அரசுக்கு உத்தரவிட்டிருந்தது. தொடக்கத்தில் இந்த முடிவை கடுமையாக எதிர்த்த கர்நாடகம், போதுமான மழை இல்லாததால் தண்ணீர் திறப்பது கடினம் என்று கூறிவந்தது. இதுதொடர்பாக விவாதிக்க பெங்களூரில் ஞாயிற்றுக்கிழமை அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது.
   ii. இந்நிலையில், கேரள மாநிலம், வயநாட்டில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், காவிரியின் கிளை நதியான கபினியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணைக்கு நீர்வரத்து அதிகரித்து வந்தது. அணையின் அதிகபட்ச நீர்மட்ட உயரம் 2,284 அடியில், ஆக. 2ஆம் தேதி நீர்மட்டம் 2,282 அடியாக உள்ளது. இதனால், அணையின் பாதுகாப்பை கருதி விநாடிக்கு 12,000 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது.

2. கர்நாடக மாநிலம், கபினி அணையிலிருந்து திறக்கப்பட்டுள்ள உபரி நீர் செவ்வாய்க்கிழமை (ஆக. 4) மேட்டூர் அணையை வந்தடையும் என நீர்வளத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.
   i. (i)மேட்டூர் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து சரிந்துவந்த நிலையில், கர்நாடகத்தில் பெய்து வரும் தென்மேற்குப் பருவமழையால் கபினி அணைக்கு நீர்வரத்து கணிசமாக அதிகரித்துள்ளது. 65 அடி உயரம் கொண்ட கபினி அணை நீர்மட்டம் 62.95 அடியாக உள்ளது. அணைக்கு விநாடிக்கு 23,009 கனஅடி தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. அணையில் 18.2 டிஎம்சி நீர் இருப்பு உள்ளது.
   ii. (ii) அணை நிரம்பும் நிலையை எட்டியுள்ளதால், பாதுகாப்பு கருதி விநாடிக்கு 25,000 கனஅடி உபரிநீர் காவிரியில் வெளியேற்றப்படுகிறது. இந்த தண்ணீர் செவ்வாய்க்கிழமை மேட்டூர் அணையை வந்தடையும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

iii. (iii) இதற்கிடையே, கர்நாடக மாநிலத்தில் காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் மழையால் கிருஷ்ணராஜ சாகர் அணைக்கும் நீர்வரத்து அதிகரித்துள்ளது. 124.80 அடி உயரம் கொண்ட கிருஷ்ணராஜ சாகர் அணையின் நீர்மட்டம் 96.90 அடியாக உள்ளது. 22,055 கனஅடி நீர் அணைக்கு வந்து கொண்டிருக்கிறது. 49.45 டிஎம்சி கொள்ளளவு கொண்ட அணையில் தற்போது 20.47 டிஎம்சி நீர் இருப்பு உள்ளது. அணையிலிருந்து விநாடிக்கு 1,766 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

iv. (iv) இவ்விரு அணைகளில் இருந்து வெளியேற்றப்படும் தண்ணீர் இதே அளவாக நீடித்தால் இரண்டு வாரங்களுக்குள் கிருஷ்ணராஜ சாகர் அணை நிரம்பி, உபரிநீர் காவிரி ஆற்றில் திறந்து விட வாய்ப்புள்ளது. இதனால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

v. (v) அணை நிலவரம்:

- மேட்டூர் அணைக்கு ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி நிலவரப்படி 42 கனஅடியாக இருந்த நீர்வரத்து உயர்ந்து 47 கனஅடியாக உள்ளது.
- அணையில் இருந்து குடிநீர்த் தேவைக்காக விநாடிக்கு 1,500 கன அடி தண்ணீர் திறக்கப்படுகிறது. அணையின் நீர்மட்டம் 73.33 அடியாக உள்ளது. நீர் இருப்பு 35.63 டிஎம்சியாக உள்ளது.

vi. ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 500 கனஅடி:

- ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து ஞாயிற்றுக்கிழமை விநாடிக்கு 500 கனஅடியாக உள்ளது.
- கபினி அணைக்கு தற்போது நீர் வரத்து குறைந்ததால், காவிரி ஆற்றில் வெளியேற்றப்படும் நீரின் அளவு விநாடிக்கு 9,000 கனஅடியாக குறைக்கப்பட்டது.
- ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர் வரத்து சனிக்கிழமை விநாடிக்கு 600 கன அடியாக இருந்தது. இது ஞாயிற்றுக்கிழமை காலை விநாடிக்கு 350 கனஅடியாகவும், மாலையில் விநாடிக்கு 500 கன அடியாகவும் இருந்தது. அருவிகளுக்கு நீர்வரத்து சீராக உள்ளது. நீர்வரத்தை மத்திய நீர்வளத் துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

3. ஸ்காட்லாந்தில் நடைபெற்ற 23-ஆவது காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள், ஞாயிற்றுக்கிழமையுடன் நிறைவடைந்தன.

i. இந்தியா 13 தங்கம், 17 வெள்ளி, 9 வெண்கலம் என, மொத்தமாக 39 பதக்கங்களுடன் 4-ஆம் இடம் பிடித்து நிறைவு செய்தது. ஆஸ்திரேலியா (171), இங்கிலாந்து (110), கனடா (62) முறையே முதல் 3 இடங்களைப் பிடித்தன.

ii. கிளாஸ்கோ நகரில் கடந்த ஜூலை 23-ஆம் தேதி தொடங்கி 11 நாள்கள் நடைபெற்ற இப்போட்டியில், 74 நாடுகளைச் சேர்ந்த 3,000 வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர். மொத்தம் 10 விளையாட்டுகள், 4 இடங்களில் விளையாடப்பட்டன. அதில், மாற்றுத்திறனாளிகளுக்கான 6 பாரா விளையாட்டுகளும் நடத்தப்பட்டன.

iii. இந்தியாவிலிருந்து 78 வீரர்கள், 48 வீராங்கனைகள் உள்பட, 191 பேர் கொண்ட குழு பங்கேற்றது. வழக்கமாக 20-க்கும் மேற்பட்ட விளையாட்டுகள் காமன்வெல்த் போட்டிகளில் இடம்பெறும் நிலையில், இந்த முறை செலவுக் குறைப்பு நடவடிக்கையாக ஹாக்கி, துப்பாக்கி சுடுதல், மல்யுத்தம், பாட்மின்டன், டேபிள் டென்னிஸ் போன்றவை சேர்க்கப்படவில்லை. இந்தியாவுக்கு சாதகமான இந்த விளையாட்டுகள் இல்லாதது, அணியின் பதக்க எண்ணிக்கையை பாதித்தது. ஆனாலும் குத்துச்சண்டை, தடகளம், பளுதூக்குதல் ஆகியவற்றில் அசத்தலாகச் செயல்பட்டு இந்திய அணியினர் பதக்கங்கள் குவித்தனர்.

iv. இந்தியாவின் குத்துச் சண்டை மற்றும் பாரா வீரர், வீராங்கனைகள், காமன்வெல்த் போட்டிகளின் வரலாற்றிலேயே தங்களின் அதிகபட்ச பதக்க எண்ணிக்கையை இந்த ஆண்டு பதிவு செய்துள்ளனர்.

v. கடந்த 2018 கோல்டுகோஸ்ட் போட்டிகளில் 3 தங்கம், 3 வெள்ளி, 3 வெண்கலம் என 9 பதக்கங்கள் வென்றதே குத்துச்சண்டையில் இந்தியாவின் அதிகட்சமாக இருந்தது. இந்த முறை அதை முறியடித்து, 7 தங்கம், 3 வெள்ளி என 10 பதக்கங்களை இந்தியர்கள் வென்றுள்ளனர்.

vi. அதேபோல், பாரா பிரிவில் இந்திய அணியினர் கடந்த 2022 பர்மிங்ஹாம் போட்டிகளில் 1 தங்கம், 1 வெண்கலம் என 2 பதக்கங்கள் வென்றதே அதிகபட்சமாக இருந்த நிலையில், இந்த முறை 3 தங்கம், 2 வெள்ளி, 2 வெண்கலம் என 7 பதக்கங்கள் வென்று அசத்தியுள்ளனர்.

vii. காமன்வெல்த் போட்டிகளில் பாரா விளையாட்டுகள் அறிமுகப்படுத்தப்பட்ட 2002 முதல் 2022 வரை மொத்தமாகவே இந்தியா அதில் 7 பதக்கங்கள் வென்றிருந்த நிலையில், தற்போது இந்த ஒரே ஆண்டில் 7 பதக்கங்களை வென்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

viii. காமன்வெல்த் போட்டிகளின் நிறைவு நிகழ்ச்சி, கிளாஸ்கோவில் உள்ள ஓவிஓ ஹைட்ரோ மைதானத்தில், இந்திய நேரப்படி ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு நடைபெற்றது. போட்டி நிறைவடைந்ததாக, இளவரசர் எட்வர்ட் அதிகாரபூர்வமாக அறிவித்தார். அதன் பிறகு காமன்வெல்த் போட்டியின் கொடியானது அடுத்த காமன்வெல்த் போட்டிகள் நடைபெறவுள்ள இந்தியாவின் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. அத்துடன், பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் அரங்கேறின

ix. 24-ஆவது காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள், 2030 அக்டோபரில் இந்தியாவின் குஜராத் மாநிலம், அகமதாபாதில் நடைபெறவுள்ளன. 1930-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட காமன்வெல்த் போட்டிகளின் நூற்றாண்டு கொண்டாட்டமாகவும் அந்தப் போட்டி அமையவுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளது, அது 2– ஆவது முறையாகும். இதற்குமுன் 2010- இல் இந்தியா முதல்முறையாக தில்லியில் காமன்வெல்த் போட்டிகளை நடத்தியது.

x. ஆடவருக்கான 5,000 மீட்டர் ஓட்டத்தில் இந்தியாவின் குல்வீர் சிங் 13 நிமிஷம், 24.95 விநாடிகளில் இலக்கை அடைந்து 3-ஆம் இடம் பிடித்தார். கென்யாவின் மேத்யூ கிப்சும்பா (13:23.61') தங்கமும், ஆஸ்திரேலியாவின் கை ரா பின்சன் (13:24.70') வெள்ளியும் வென்றனர். வெண்கலம் வென்ற குல்வீர் சிங், காமன்வெல்த் 5,000 மீட்டர் ஓட்டத்தில் பதக்கம் வென்ற முதல் இந்தியராக சாதனை படைத்தார். அத்துடன், ஏற்கெனவே 10,000 மீட்டரில் வெள்ளிப் பதக்கம் வென்ற குல்வீர் சிங், ஒரே காமன்வெல்த் போட்டியில் இரு தடகள பதக்கங்கள் வென்ற முதல் இந்தியராகவும் அவர் சாதனை படைத்துள்ளார்.

4. துலீப் கோப்பை – கிரிக்கெட்

5. தைபே ஓபன் பாட்மின்டன் சூப்பர் 300 பாட்மின்டன் போட்டி மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்திய இளம் வீராங்கனை தன்வி சர்மா (17) சாம்பியன் பட்டம் வென்றார்.

6. இந்தியாவில் பொது சிவில் சட்டத்தை அமல்படுத்த வங்கதேச எழுத்தாளர் தஸ்லிமா நஸ்ரீன் ஆதரவு தெரிவித்துள்ளார்.

i. கடந்த 1993-ஆம் ஆண்டு மதரீதியான துன்புறுத்தலை எதிர்கொள்ளும் ஒரு

ஹிந்து குடும்பத்தின் கதையை விவரித்த 'லஜ்ஜா' என்ற தஸ்லிமா நஸ்ரீனின் நாவல், வங்கதேசத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இதைத் தொடர்ந்து அவர் அந்நாட்டில் இருந்து வெளியேறினார்.

ii. பின்னர், மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவுக்கு இடம்பெயர்ந்த அவர், 'த்விகண்டிதோ (ஸ்பிலிட்: எ லைஃப்)' என்ற பெயரில் தனது சுயசரிதையை எழுதினார். இந்த நூல் அங்கு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி வன்முறையான போராட்டங்களுக்கு வழிவகுத்தது. இதையடுத்து அவர் இந்தியாவில் இருந்து வெளியேறினார்.

iii. சுமார் 19 ஆண்டுகளுக்குப் பின்னர் கொல்கத்தா வந்தடைந்தார்.

7. கடந்த நிதியாண்டில் ரூ.1 கோடி மதிப்பு கொண்ட ஒரு சீன அந்நிய நேரடி முதலீட்டுத் திட்டம், ரூ.610.42 கோடி மதிப்பு கொண்ட 13 ஹாங்காங் அந்நிய நேரடி முதலீட்டுத் திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதுதொடர்பாக மத்திய வர்த்தக அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை (டி.பி ஐஐடி) வெளியிட்டுள்ள தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

i. கடந்த நிதியாண்டில் (ஏப்ரல் 2025-மார்ச் 2026) மொத்தம் ரூ.10,292.67 கோடி மதிப்பிலான 63 அந்நிய நேரடி முதலீட்டுத் திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

ii. இதில் அதிகபட்சமாக சிங்கப்பூரின் ரூ.3,259.88கோடி மதிப்பிலான 5 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, பிரிட்டனின் ரூ.2,477.67 கோடி மதிப்பிலான 5 திட்டங்கள், தாய்லாந்தின் ரூ.1,600 கோடி மதிப்பிலான 2 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

iii. இதேபோல ரூ.1 கோடி மதிப்பு கொண்ட ஒரு சீன அந்நிய நேரடி முதலீட்டுத் திட்டம், ரூ.610.42 கோடி மதிப்பு கொண்ட 13 ஹாங்காங் அந்நிய நேரடி முதலீட்டுத் திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்தது.

iv. இந்தத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தபோதிலும் சீனா, ஹாங்காங் அல்லது இந்தியாவுடன் நில எல்லைகளைப் பகிர்ந்துகொள்ளும் நாடுகளில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்குத் தளர்த்தப்பட்ட அந்நிய நேரடி முதலீட்டு விதிமுறைகள் பொருந்தாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.